பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## "நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்"

சங்கீதம் 90:14

செய்தி மலர்
2022
ஏப்ரல்

இதழ் : 12
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகள், வாலிபர்கள், சிறுபிள்ளைகள் யாவரையும் கர்த்தரும், இருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன் கடந்த மாதம் முழுவதும் நம் ஒவ்வொருவரையும் கண்ணின் மணிபோல காத்து, ஆசீர்வதித்து திருப்தியாய் வழிநடத்தி வந்தமைக்காக நாம் யாவரும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தருக்கு நன்றி சொல்லி துதிக்கலாம். கடந்த மாதத்தில் நடந்த எல்லா ஆராதனைகள், ஜெபகூட்டங்களிலும், கேம்ப் ஊழியத்திலும் கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது எல்லா கூடுகையையும் ஆசீர்வதித்து கொடுத்தமைக்காக நன்றி சொல்ல கடமை பட்டுள்ளோம். நமது சபையின் சிறுபிள்ளைகள் தேர்வு முடிந்து, புதிய கல்வி ஆண்டுக்குள் பிரவேசிக்கின்றனர். நமது பிள்ளைகளுக்காக நாம் ஒவ்வொருவரும் நம் ஜெபங்களில் நினைவு கூறுவோம். வருகின்ற கல்வியாண்டில் நமது பிள்ளைகளை உயர்ந்த இடங்களிலே கர்த்தர் வைக்கப்போகின்ற கிருபைக்காக நாம் நன்றி சொல்வோம்.

மூன்று மாதங்கள் முடிந்து நான்காவது மாதத்தில் பிரவேசிக்கிற நம் யாவரையும் தேவன்தாமே திருப்தியாய் நடத்த வல்லவர். அந்த விசுவாசத்தில் சற்றும் குறையாதவர்களாய் மோசே ஜெபித்தது போல நாமும் ஜெபிப்போம்.

**“நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்” சங்–90:14.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ ஜனமே, காலை தோறும் அவருடைய கிருபை புதியதாய் இருக்கின்றது, அவரை தேடுகிறவர்கள் கண்டடைகிறார்கள்.

இந்நாட்களிலே எதிலும் திருப்தியற்ற வாழ்வை நம்மில் அநேகர் கடந்து செல்கின்றோம். காரணம் வரவுக்கு மேல் செலவுகள், திட்டமிடாத வாழ்க்கை முறை, எதிர்பாராத செலவுகள், நம்மை மற்றவர்கள் ஏமாளிகளாக்குவது, பண ஆசைகள், கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, பெருமையான ஜீவனம் போன்றவைகள். மேற் சொன்ன உலகப்பிரகாரமான செயல்களை தவிர்த்து, கர்த்தரிலும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொண்டு தைரியமாய், திருப்தியாய் வாழ ஒப்புவிப்போம்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் எப்பொழுதும் நாம் தளராமல், முறுமுறுக்காமல் எல்லாவற்றிலும் கர்த்தரையே துதித்து, அவரை மகிமைபடுத்துகிறவர்களாய், சந்தோஷமான வாழ்வு வாழ பழகவேண்டும்.

கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அநேக திருப்தியான காரியங்களை கொடுத்து நடத்திவருகிறார். நம் ஆயுசு நாட்களை கூட்டி கொடுத்திருகிறார். வியாதி நம்மை அனுகாமல் காத்திருக்கிறார், உச்சிதமான கோதுமையினாலும், கன் மலையின் தேனினாலும் திருப்தியாக்குகிறார். அவருடைய கிருபைகள் நாள் தோறும், ஒவ்வொரு நாழிகையும் நம்மை சூழ காத்திருக்கிறார். எல்லா வற்றிற்கும் மேலாக "ஆலயத்தின் நன்மையினால் திருப்தி ஆக்குகிறார்".

"உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் , உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்" சங் -65:4

சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நீங்களும் விடடுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவீர்கள். எபி 10:25.

ஆம் பரியமானவர்களே நாம் சகோதர, சகோதரிகள் சபையார் ஒருமித்து ஒரு குடும்பமாக, ஒரு சபையாக ஜெபிக்கின்ற அநேக காரியங்களை கர்த்தர் ஆசீர்வாதமாக மாற்றி கொடுத்து இருக்கின்றார் என்பதற்கு நாம் அநேகர் சாட்சிகளாய் உள்ளோம். ஒருவர் பாரத்தை, ஒருவர் சுமப்பது என்பது ஒரு பெரிய ஆசீர்வாதம், நாம் பிறருக்காக ஜெபிக்கின்றபோது, கர்த்தர் கேட்டு, நம்மையும் விடுதலையாக்குகிறார்.

"நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன், நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன், என்ற தாவீதின் நன்றியறிதலான ஜெபம் போல, நாமும் விசுவாசத்தோடே ஜெபிப்போம். கர்த்தர்தாமே நம்மை திருப்தியாய் நடத்திடுவார்.

பரிசுத்தர் பவுலைப்போல நாமும் அறிக்கையிட முடியும் பரியமானவர்களே "என் குறைச்சலினால் நான் சொல்லுகிறதில்லை, ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிக்கக்

கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும் பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்" பிலி 4:11,12. இப்படியான விசுவாசத்தை, பெலத்ழத கிறிஸ்துதாமே பெலனளிப்பார்.

சுமார் ஒரு மாத காலம் நாம் அநேகர் உபவாசத்தோடும், ஜெபத்தோடும், பொருத்தனைகளோடும் இந்த தவசு நாட்களை பின்பற்றிவருகின்றோம், கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பார். வருகின்ற நாட்களிலே நடைப்பெறப்போகின்ற எல்லா ஆராதனைகளிலும் கர்த்தர் நாமம் மகிமைப்படும்படியாகவும், நடத்தப்போகிற தேவ பிள்ளைகளை கர்த்தர் வல்லமையாக எடுத்து உபயோகிக்க நாம் அனைவரும் இனைந்து உருக்கமாக ஜெபிப்போம். விசேஷமாக "குருத் தோலை ஞாயிறு, பெரிய வியாழன், புனித வெள்ளி, உயிர்த்தெழுந்த ஆராதனை" இவைகளுக்காக ஜெபித்துக்கொள்ளுவோம். 10ஆம், 11ஆம் & 12ஆம் வகுப்புகள் படிக்கும் பிள்ளைகளின் தேர்விற்காகவும், அவர்களுடைய உயர்படிப்பிற்காகவும், புதிய கல்வியாண்டில் பிரவேசிக்கிற நமது சபையின் பிள்ளைகள் யாவருக்காகவும், அவர்களின் சுகம், பாதுகாப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்வோம். கர்த்தர்தாமே அவர்களுக்கென்று நியமித்திருக்கிற தூதர்களை கொண்டு காப்பாராக. ஆமென்.

கர்த்தரின் ஊழியன்
ஜெயசேகர்

## தேவ செய்தி

யோவான் 3:16 – தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இயேசு நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஆண்டவராகிய இயேசு நாம் நித்தியஜீவனை அடையவேண்டும்

என்பதற்காகவே வந்தார். சிலுவையில் நமக்காய் பலியானார். மற்றவர்கள் வாழவேண்டும் என்பதற்காக தம்மையே பலியாக அர்ப்பணித்தார். இதுதான் தேவ அன்பு. நித்திய ஜீவனை சுதந்தரிக்க நாம் செய்ய வேண்டியது என்ன? இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்.

## தடையாய் இருக்கும் பாவம்:

ஒரு மனிதன் நித்திய ஜீவனை அடைய முடியாதபடிக்கு தடையாய இருப்பது பாவம். பாவம் தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறது. தேவ கட்டளையை மீறுவது பாவம். ஆதாம், ஏவாள் பாவம் செய்தபோது, அவர்களுக்கும் தேவனுக்கும் இருந்த உறவு அறுபட்டு போனது. மத்தேயு 18:8,9–ல் இயேசு பாவத்தினால் வரும் விளைவை நேர்த்தியாக விவரிக்கிறார். கண்ணாவது கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு என்றார்.பாவத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அது மிகவும் கொடுமையான ஒரு ராட்சதன். அந்த பாவத்திற்கான காரணம் எதுவாக இருந்தாலும், அதை நம் வாழ்விலிருந்து அகற்ற வேண்டும். நாம் செய்ய வேண்டியது என்ன? எபி 12:1 – நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, இயேசுவை நோக்கி ஓடவேண்டும். விசுவாச வாழ்க்கையில் நடந்து அல்ல; இயேசுவை நோக்கி ஓடவேண்டும். அன்பான இயேசு கரங்களால் நம்மை அணைத்துக்கொள்வார்.

## தேவ சத்தம் நம்மை வழி நடத்தும்:

வேத வசனங்கள் மூலமாக நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்கமுடியும் . யோவான் 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று யோவன் 5:25 சொல்கிறது. தேவ வார்த்தைகளை நாம் ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று என்னுகிறீர்களே. சிலர் வேதத்தை ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெறுவார்கள். ஆனால் அவர்கள் நடத்தைக்கும், ஆராய்ச்சிக்கும் சம்பந்தம் இருக்காது. வேதத்தை ஆராய்ந்து , கற்றுக் கொண்ட காரியங்களுக்கு நாம் கீழ்படிய வேண்டும். அப்பொழுதுதான் நித்தியஜீவனை பெற்றுக்கொள்ள முடியும்.

யோவான் 10:27-28 என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.

## இயேசுவின் மூலமாக மாத்திரமே!

இயேசுவின் மேல் விசுவாசத்தை வைப்பதன் மூலம்தான் நித்தியஜீவனை அடையமுடியும். நம்முடைய பணபலமோ, சொந்த முயற்சியோ அல்ல. சிலுவையில் பரிசுத்தமுள்ள இரத்தத்தை சிந்திய இயேசுவின் மூலமே நாம் நித்தியஜீவனை பெறமுடியும். மாற்கு 10ஆம் அதிகாரத்தில் (10:17) இயேசுவை நோக்கி ஒருவன் ஓடி வருகிறான். நித்தியஜீவனை பெறவேண்டும் என வாஞ்சை இருந்தது. ஆனால், பணத்தின் மீது நம்பிக்கை இருந்ததால், அவன் துக்கத்தோடே போய்விட்டான். இயேசு சொன்ன வார்த்தை ஐசுவரியவான் தேவனுடைய ராஜியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.

## கனிதரும் வாழ்க்கை:

ஒருவன் தேவனுடைய பிள்ளையாய் மாறும் போது, அவனுடைய வாழ்க்கை மாறுகிறது. நடை, உடை, பார்வையில் மாற்றம் பேசும் பேச்சில் ஒரு மாற்றம். விசுவாச வாாத்தைகளைப் பேசத் துவங்குகிறான். தன்னைப்பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் பெருமை பேசின வாய், இயேசுவின் மகிமையை மாத்திரம் பேசுகிறது. ரோமர் 2:7 - சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.

தேவனை விசுவாசிப்பது ஒரு முற்றுப்புள்ளி அல்ல; அது நம் வாழ்வில் தொடர்கதையாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான், முடிவுபரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருக்க முடியும். அதுதான் கனிதரும் வாழ்க்கை. நற்கிரியைகளை செய்யும் வாழ்க்கை சிலர் தங்களுடைய பேர் புகழுக்காக நற்கிரியை செய்வார்கள், ஊழியம்

செய்வார்கள். அப்படி அல்ல, தேவனுடைய மகிமையை தேட வேண்டும், தேவனுக்கே கனத்தை கொடுக்க வேண்டும்.

**முடிவு:**

முடிவிலே, தேவன் சில ஊழியர்களைப் பார்த்து, உங்களை நான் அறியேன் என்று சொல்கிறார். என்ன பரிதாபம்! அற்புதங்களைச் செய்தவர்கள், தீர்க்கதரிசனம் சொன்னவர்கள் பிசாசுகளை துரத்தினவர்கள் காரணம். தேவ சித்தத்தின்படி செய்யவில்லை. தேவனை மகிமைப் படுத்தவில்லை. நித்தியஜீவனும் அவர்களுக்கு இல்லை. இந்த, லெந்து நாட்களில் உபவாசித்து, நம்மைத் தாழ்த்தி ஜெபிப்போம். தேவ வசனங்களை ஆராய்வோம். தேவ சித்தத்தின் படி நடப்போம். தேவமகிமைக் கென்று நற்கிரியைகளை செய்வோம். ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான்17:3). தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாதாக! ஆமென்.

அன்பு சகோதரன்,
J. கிருஸ்டோபர் தேவராஜ்

## பேரன்பு

ஆதி முதலாய் கொடுத்த அன்பு
ஆசையாய் என்னை அழைத்த அன்பு
நான்கு திசையும் வனாந்திரம் – அதில்
நானே வழி என்று உரைத்த அன்பு
பாவியாம் என்னை இரட்சிக்க
சிலுவையின் வலியை ஏற்ற அன்பு
பிதாவின் சித்தம் நிறைவேற்ற
பரிசுத்த வாழ்வை கொடுத்த அன்பு
கல்லாய் இருந்த இதயத்தை
கல்வாரி இரத்தத்தால் கரைத்த அன்பு
அன்பின் மறுபெயரட என்ன என்றால்
மனுகுல உருவெடுத்த இயேசு என்பேன்

–K. வனித்தா

## போதகர் ஜீவானந்தம் (பிறப்பு :1932)

போதகர் ஜீவானந்தம் அவர்கள் கிறிஸ்துவை அறியாத ஒரு இந்து குடும்பத்தில் சாலம் பாளையம் எனும் கிராமத்தில் பிறந்தார். (தென் ஆர்க்காடு மாவட்டம்)

எட்டு வருட பள்ளிப் படிப்புக்குப் பின்னர் தந்தையார் போலவே ஆசிரியராக விரும்பி விழுப்புரம் அருகில் உள்ள கத்தோலிக்க பள்ளி ஒன்றில் ஆசிரியர் பியிற்சியை மேற்கொண்டார்.

வெற்றிகரமான ஆசிரியர் பயற்சிக்கு பின்னர் 1951 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள ஒரு பள்ளியில் பணி நியமன ஆணை கிடைக்கவே சென்னைக்கு இடம் பெயர்ந்து ஆசிரியர் பணியினை செய்து வந்தார். அந்த நாட்களில் தி.மு.க வின் மீதுள்ள அதீத பற்றால் கழகத்தின் தீவிர தொண்டனாய் பணியாற்றி வந்தார்.

1957 ஆம் ஆண்டு லேமென் சுவிஷேச ஐக்கியத்தின் மூலமாக கிறிஸ்துவை அறிந்துகொண்டு மனமாற்றம் அடைந்து புதுவாழ்வை தொடங்கினார்.

இரட்சிக்கப்பட்ட சில நாட்களிலேயே சுவிஷேசகராக நற்செய்தியை முழங்க ஆரம்பித்துவிட்டார்.

1960 ஆம் ஆண்டு பரிசுத்த ஆவியின் அமர்வு பெற்று பகுதி நேரமாக ஊழியம் செய்து வந்தார். 1968 இல் தனது ஆசிரியர் பணியினை ராஜினாமா செய்துவிட்டு முழுநேரமும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய புறப்பட்டார்.

இந்த நாட்களில் தான் ஐயா அவர்களுக்கு ACA சபைகளுடனான நெருக்கம் அதிகமானது.

1975 ஆம் ஆண்டு C.P.D அருமைநாயகம் அவர்களின் முயற்சியில் முதன்முறையாக கடல் கடந்து யாழ்பாணம் பகுதிகளில் நற்செய்தியின் ஸ்தானாபதியாக ஊழியம் செய்தார்.

ஜீவானந்தம் ஐயா நடத்தி வந்த முழு இரவு ஜெபங்கள் சென்னை பட்டணத்தில் அநேகரை கறிஸ்துவின் ஊழியத்தை செய்ய எழுப்பிவிட்டது. சகோ. டி.ஜி.எஸ் தினகரன் அவர்கள் இந்த முழு இரவு ஜெபங்களில் தவறாமல் கலந்து கொள்வார்.

1983 முதல் 1990 வரை World Missionary Evangelism, Madras என்ற ஸ்தாபனத்தை நிர்வகித்தார்.

1990 ஆம் ஆண்டு தேவனுடைய தரிசனத்தை பெற்ற 'மகிழ்ச்சி' திருசபையை தொடங்கினார் (Delight Christian Assembly). மகிழ்ச்சி பத்திரிக்கையின் ஆசிரியராயும் ஸ்தாபகராயும் விளங்கினாட. கர்த்தரால் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட ஜீவானந்தம் ஐயா அவர்களின் மூலமாகதான் பாஸ்டர் D.மோகன்(NLAG) கிறிஸ்துவின் ஊழியத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தார்.

'திருக்கரத்தால் தாங்கி என்னை . . .' என்ற பாடலை இயற்றிய சகோ. பீட்டர் அவர்களுக்கு ஐயா தான் புதுவாழ்வு கொடுத்தார் எனலாம்இ தான் செல்லும் இடமெல்லாம் சகோ. பீட்டரை அழைத்து சென்று மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவரை தன் கூடவே தங்கவைத்து உணவளித்தார்.

இது போல ஐயா அவர்கள் உருவாக்கிய தேவமனிதர்கள் அநேகர். பாஸ்டர் ஜீவானந்தம் போன்றோருக்காக கர்த்தரை துதிப்போம்.

சபை ஊழியன்,
எபிநேசர்

சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்;
தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.
கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே
வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்;
அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை
ஒப்புக்கொடீர்.

சங்கீதம் 41:1,2

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஆன்ட்ரியா மகதளேனா தாஸ்
சகோ. திவ்யராஜ்
செல்வன். ஜெரால்டு ஜெஸ்டின்
சகோதரி. ஷீஜா கிருஸ்டோபர்
சகோ. ஃபிராங்கிளின்
சகோ. ரிச்சர்ட்சன் டேனியல்
சகோ. சதீஷ் ராஜேந்திரன்
செல்வன். மதன் ராஜ் மகேஷ்ராஜ்
செல்வன். ஆன்டர்சன் அறிவுச்சுடர்
செல்வி. தியா யாழினி சுபின் சிங்
சகோ. ஜோசப் பாபுராஜ்
சகோதரி. சோஃபியா வசந்தா மேரி
செல்வி. ஜோயன் ஜாஃப்ரீனா
செல்வி. ஜோயன் ஹாஃரீனா
சகோ. சுகுமார்
செல்வி. லிடியா வில்கின்ஸ்
சகோ.பென்சாம்
சகோ.குமாரசாமி
செல்வி. கிறிஸ்டீனா வினீஷ்
சகோதரி. கலாராணி ஜெயக்குமார்

சகோ. ஜிவல்சிங்
சகோ. பால் ஜெகநாதன்
சகோதரி. நிஷாந்தி விஜயன்
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோ. ரவி ஜாண் பீட்டர்
செல்வி. வின்சி டேவிட்
செல்வன். விமல் டேவிட்
சகோ. கனீஷ் ஜோஸ்வா அமலன்
செல்வன். ரான்கின் ஜோனு ராபின் ராஜ்
செல்வி. குமாரி ராஜன்
சகோ. எட்வர்ட் சந்தோஷ்
செல்வி. ஷாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
செல்வி. ரீனி ரேய்ச்சல் வில்சன்
சகோதரி. விஜயகுமாரி சுந்தர்ராஜ்
செல்வி. சோனியா மேரி வேளாங்கண்ணி
சகோ. மகேஷ்ராஜ்
சகோ. ஃபிராங்ளின் டினோ
சகோதரி. லாவண்யா வினோத்
செல்வி. இபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
செல்வி. ஹான்ஸிகா சாம் ஆனந்த்
சகோதரி. ஹேனா ஜோன் வினீஷ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. ஜிவல் சிங்
திருமதி & திரு. ஸ்டீபன்
திருமதி & திரு. அருண் இம்மானுவேல்
திருமதி & திரு. பால் டேனியல்

# 2022 ஏப்ரல் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/04/2022 | சகோ.ஆரோக்கிய தாஸ் | சகோ.தாமஸ் |
| 10/04/2022 | குருத்தோலை ஞாயிறு | |
| 17/04/2022 | ஈஸ்டர் ஆராதனை | |
| 24/04/2022 | சகோ.வேலு ராமர் | சகோ.அருண் இமானுவேல் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 9:00 முதல் 10:45 வரை
## மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/04/2022 | சகோ.M.கிறிஸ்டோபர் | சகோ.J.கிறிஸ்டோபர் |
| 08/04/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 15/04/2022 | புனித வெள்ளி ஆராதனை | |
| 22/04/2022 | வாலிபர் ஆராதனை | |
| 29/04/2022 | சகோ. எபிநேசர் | சகோ. ஆசிர்வாதம் |

14/04/2022 அன்று பெரிய வியாழன் ஆராதனை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

23/04/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
கூடுகையை பொறுப்பெடுத்து நடத்தும் குடும்பம் – சகோதரி. எப்சி சாம்
(வேத வினா பகுதி–யோபு )

29/04/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:00 முதல் இரவு 8:00 மணி வரை
(வேத வினா பகுதி–லேவியராகமம் )

# 2022 ஏப்ரல் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



**1.எங்கே ஆலயத்தை கட்ட வேண்டும் என்று கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுக்கு கட்டளையிட்டார்?**

**2.எந்த மாதத்திலே திராட்சரசம் அர்தசஷ்டா ராஜாவுக்கு முன்பாக வைக்கப்பட்டது?**

**3. அர்தசஷ்டா ராஜாவுக்கு எழுதப்பட்ட மனு எந்த பாஷையில் எழுதப்பட்டது?**

**4.அப்பம் சாப்பிடாமல், தண்ணீர் குடிக்காமல் துக்கமாய் இருந்தவன் யார்?**

**5.அலங்கம் கட்ட இஸ்ரவேல் ஜனங்களுக்கு தடையாக நின்றவர்கள் யார்?**

**6.வம்ச அட்டவனையை தொலைத்தவர்கள் யார்?**

**7.எருசலேம் ஆலயத்தைக் குறித்த கோரேஸ் ராஜாவின் உத்தரவு எதிலே எழுதப்பட்டிருந்தது? எங்கே கண்டெடுத்தார்கள்?**

**8. யூதா தேசத்தின் அதிபதிகள் ஜனங்களிடம் என்ன படி வாங்கினார்கள்?**

**9.நெகேமியா எங்கே, என்ன வேலை செய்து கொண்டிருந்தான்?**

**10.எருசலேம் தேவாலயத்தை திரும்ப கட்ட ஏவப்பட்டவன் யார்? அதை கட்டினவர்கள் யார்?**

**11.அலங்கம் எத்தனை நாட்களில் கட்டப்பட்டது?**

**12.பாபிலோனிலிருந்த தேவாலயத்துக்கு கொடுக்கப் பட்ட காணிக்கை என்ன?**

**13.தேறின வேதபாரகன் யார்? அவன் எங்கிருந்து வந்தான்?**

**14.ஆலயம் திரும்ப கட்டப்படும்போது யார் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்?**

**15.நெகேமியாவில் குறிப்பிடப்பட்டுள்ள வாசல்கள் எத்தனை?**

**விடைகளை வருகின்ற** 20-04-2022**க்குள்**
(WhatsApp #65040638) **என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் எஸ்றா, நெகேமியா ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்**

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

## 2022 –மார்ச் மாத வேத வினாவுக்கு விடை

1. யூதா, பென்யமீன் கோத்திரத்தார் (II நாளா 11:1)

2.மோரியா மலை (II நாளா 3:1)

3.சரி (II நாளா 7:3)

4.மாகாள் (II நாளா 15:16)

5.யோராம் (II நாளா 21:4)

6.ஈராம் (II நாளா 2:3,12)

7.தேவனாகிய கர்த்தர் (II நாளா 1:1)

8. மூவாயிரங்குடம், வெண்களம் (II நாளா 4:2,5)

9.சேபாவின் ராஜஸ்திரீ (II நாளா 10:18)

10.அதோராம் (II நாளா 10:18)

11.யோசபாத் (II நாளா 17:9)

12.லேவியர் (II நாளா 23:18)

13.50 பொன் சேக்கல் (II நாளா 3:9)

14.தவறு (II நாளா 6:32,33)

15.ரெகொபெயாம் (II நாளா 16:8)

## 2022 –மார்ச் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.பியூலா ஜெகன்நாதன்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.வனித்தா காளிமுத்து
Sis.விஜயா ஆண்டனி
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Bro.பால்ராஜ்

நீங்கள் உங்களைவ வஞ்சிக்காதபடிக்கு திரு வசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக் 1:22).

இந்த வாலிபர் பகுதியை வாசிக்கும், தயவாய் தேவன் தம் அண்டை இழுத்துகொண்ட கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொர்வருக்கும் கர்த்தரும் அருமை ரட்சகருமான இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறேன்.

தேவன் தயவாய் நம்மை அவரை கண்டு கொள்ளும் இரட்சிப்பை தம் ஒரே பேராகிய குமாரன் இயேசுவின் மூலமாய் நமக்கு தந்து நம்மை அவரோடு இணைத்தார், இவ்விதமாய் தயவாய் இரட்சிப்பை பெற்ற நாம் அதை பரிசுத்தமாய் காத்துகொள்ள கர்த்தருடைய வார்த்தைகள் நம் உள்ளத்தில் நிலைத்து இருப்பது அவசியம், அவைகளை நம் வாழ்வில் நடைமுறை படுத்துவது மிகவும் அவசியம். நாம் அநேக நேரங்களில் கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கிறோம், வாசிக்கிறோம், தியானிக்கிறோம் ஆனால் அவைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் காரியங்களில் பெலவீனர்களாய் இருக்கிறோம், யாக் 1-22 இவ்விதமாய் கூறுகிறது கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கிற நாம் அதின் படி செய்ய தவறினால் நம்மை நாமே வாஞ்சிகிறவர்களாய் இருப்போம் என்கிறது.

1சாமு -15 ஆம் அதிகாரத்தில் சவுல் ராஜாவுக்கு கர்த்தருடைய வார்த்தை சாமுவேல் தீர்க்கதரிசி மூலமாய் உண்டாகி அமலெக்கை பெரியோர் சிறியோர் விலங்குகள் உட்பட ஒன்றையும் தப்பவிடாமல் அழிக்கும் படி கர்த்தர் கட்டளையிட்டார். யுத்தத்திற்கு சென்ற சவுல் மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடுத்து விலங்குகள் மனிதர்களில் நல்வற்றை தப்ப விட்டு கர்த்தருடைய கட்டளையை மீறி கர்த்தரை துக்கபத்தினார். மாம்ச இச்சை கர்த்தரின் கட்டளையை புறக்கணிக்க செய்தது இதனால் கர்த்தர் சவுல் ராஜாவை அலருக்கு நியமித்த மகிமையில் இருந்து புரக்கணித்தார், யாக் 1:15 இவ்விதமாய் கூறுகிறது இச்சையானது கற்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும் இவ்விதமாய் சவுல் முதலில் கர்த்தரைவிட்டு பிரிந்து ஆவியில் மரித்துபோனார். அதே போல 11இராஜாக்கள் 22ஆம் அதிகாரத்தில் கர்த்தருடைய ஆலயத்தில்

ஏந்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான். இதனால் நடந்தது என்ன அவர்கள் சாலமோனை கர்த்தரை விட்டு வழி விலக செய்தார்கள் முடிவு, 1இராஜாக்கள் 11:4. சாலமோன் வயது சென்றபோது, அவருடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.

எனவே நாமும் கூட கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல அவைகளின் படி செய்ய கவனமுள்ளவர்களாய் இருக்கும்படி தேவன் தாமே நமக்கு தம்முடைய கிருபைகளை தருவாராக. ஆமென் இப்படியாக கர்த்தருடைய வார்த்தைகளை நாம் கேட்டு அவைகளை நம் வாழ்வில் கடைபிடித்தால் தேவன் நமக்கென்று வைத்துள்ள கிருபைகளுக்கும், திட்டங்களுக்கும் பங்குள்ளவரானார். ஆதி 26:4,5 ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால்,

நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார். இங்கு ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தார் எனவே அவர் சந்ததியை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

நாமும் கர்த்தருடைய வார்த்தைகளை நம் வாழ்வில் கடைப்பிடிப்போம், நம் அடுத்த தலைமுறை தலைமுறையாய் கர்த்தருடைய நாமத்தை மகிமைபடுத்தும்படியாய் வாழ பிள்ளைகளுக்கு கற்றுபொடுப்போம் கர்த்தருடைய திட்டங்களுக்கு பங்காளர்களாகவும் பயனுள்ளவர்களாகவும் வாழ்வோம். கர்த்தர் தாமே நம் அனைவரையும் அவர் வார்தைகளின்படி வாழ கிருபை செய்து ஆசீர்வதிப்பாராக ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே

## சகோதரிகள் பகுதி

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துகளை தெரிவித்துகொள்கிறேன். இந்த வாய்ப்பை தந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

"மேன்மைபாராட்டல்" என்ற தலைப்பின் அடிப்படையில் வேதத்தில் இருந்து சில காரியங்களை நாம் தியானிப்போம்.

"சங்கீதம்-20:7" "சிலர் இரதங்களைக்குறித்தும் சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள் நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை குறித்தே மேன்மைபாராட்டுவோம்" என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே இன்று நம்முடைய மேன்மைபாராட்டுதல் எதை குறித்து காணப்படுகிறது. நம்முடைய பதவியை குறித்தா? அல்லது நம்முடைய குடும்பபெருமையை குறித்தா? என்பதை நாம் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். நம்முடைய மேன்மைபாராட்டல் இவை எல்லாவற்றையும் தந்து நம்மை வாழ வைத்ததை "இயேசு கிறிஸ்துவையே குறித்து மேன்மை பாராட்டுவோம்"

"II கொரி-10:17"

மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.

"நீதி-16:2"

"மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்" என்று வேதம் கூறுகிறது.

பிரியமானவர்களே இதற்கு முக்கியமாக நமக்குள் தாழ்மைகுணம் காணப்படவேண்டும். எந்த நேரத்திலும் எந்த சமயத்திலும் நம்மை நாம் தாழ்த்த வேண்டும் நான் என்கிற பெருமை நமக்குள் காணப்படகூடாது.

சில நேரங்களில் நாம் செய்த சில நன்மையான காரியங்கள் மூலம் அந்த பாராட்டு நமக்கு வரும்போது நமக்குள் பெருமை காணப்படுகிறதா? அல்லது அந்த வாய்ப்பை நமக்கு தந்த கிறிஸ்துவை நாம் நோக்கி பார்க்கிறோமா? என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

"மத்தேயு -23:12"

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

"நீதி-16:18"

விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை

### 1.)அப்போஸ்தலர் 14:8-15

பவுல் ஊழியம் செய்த நாட்களில் அநேக அற்புதங்களை கர்த்தரின் நாமத்தில் செய்து வந்தார். பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று அந்த மக்கள் பவுலை "மெர்க்கூரி" என்று கூறி அவனை மேன்மைப்படுத்தினார்கள். ஆனால் பவுலோ அவன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தன்னை தாழ்த்தி அந்த மக்களை நோக்கி நாங்களும் உங்களை போல பாடுள்ள மனுஷர்கள் தான் என்று கூறி தன்னை தாழ்த்தினார் பவுல்.

ஆம் பிரியமானவர்களே இன்று நமக்குள் இப்படிப்பட்ட தாழ்மையின் அனுபவம் காணப்படுகிறதா? என்று சற்று சிந்தித்து பார்ப்போம்.
வேதத்தில் நாம் பார்க்கிறோம் "1கொரி -9:16"
சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும் மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

## 2.)தானியேல் 4:30-37

நேபுகாத்நேச்சார் ராஜாவின் வாழ்க்கையில் நடந்ததை நாம் அறிவோம். என் வல்லமையின் பராக்கிரம், என் மகிமைப்பிராதாபம், நான் கட்டின மகா பாபிலோன் என்று மனமேட்டிமை கொண்டான்.
அன்பானவர்களே அவனுக்கு நேர்ந்தது என்ன ராஜியபாரம் அவனைவிட்டு நீங்கிற்று.

கர்த்தர் தமக்கு சித்தமாயிருக்கிறவனுக்கு அதை கொடுப்பார் என்று அவன் அறியும் மட்டும் மனுஷரின்று தள்ளப்பட்டு வெளியின் மிருகங்களோடு சஞ்சரித்தான்.

இறுதியில் அவன் தவறை உணர்ந்த பின் அவன் கர்த்தரை உயர்த்தி தன்னை தாழ்த்தினான்.
"அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்."

ஆம் பிரியமானவர்களே நாமும் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ நம்மை அர்பணிக்கவேண்டும்.

## 3.)இயேசுகிறிஸ்துவின் தாழ்மை

நாம் அனைவருக்கும் தெரியும் இயேசு சீடர்களுடன் பந்தியிருக்கையில் தன்னை காட்டி கொடுப்பவன் இவன் தான் என்று தெரிந்தும் அவனுடைய கால்களை கழுவினார்.

ஆம் பிரியமானவர்களே இதைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு நமக்கு தேவையில்லை.
"ரோமர் 5:8"

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.
தேவனுடைய பிள்ளைகளே, இந்த லெந்து நாட்களிலும், நாம் நம்மை நாம் ஆராய்ந்து பார்ப்போம் நம்முடைய வாழ்க்கையில் என்ன குறைகள் என்பதை, உணர்ந்து தம்மைதாழ்த்தி அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, கர்த்தருடைய வருகைக்கு எதிர்கொண்டு போக
நாம் ஆயத்தப்படுவோமாக!!!
எபேசியர் 4:2,3
"மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்"
கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக!!! ஆமென்

கர்த்தரின் பணியில்,
சகோதரி. ஷீபா பிரசாத்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில










# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

*96646444*

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

*23924262 - 97545812*

பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

*66889535 - 98852812*

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்**

*67792009 - 56640551*

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

*60781168*

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only